ந.க.எண்.அ2/27409/2020

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தேனி மாவட்டம்,
தேனி.
நாள். 26.03.2022.

## அ றி வி ப் பு

அரசாணை எண்.578, வருவாய்த்துறை, நாள்.30.12.2014-இன்படி, தேனி மாவட்ட பேரிடர் மேலாண்மை குழுவிற்கு ஒப்பளிக்கப்பட்டள்ள கீழ்காணும் தற்காலிக காலிப்பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையில் நிரப்புவதற்கு தேனி மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியான நபர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் 30.04.2022 அன்று மாலை 5.00 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பதவியின் பெயர் | பணியிடங்-களின் எண்ணிக் கை | தொகுப்-பூதியம் (ரூபாய்) | அதிக பட்ச வயது | கல்வித் தகுதி |
|---|---|---|---|---|---|
| 1. | இளநிலை உதவியாளர் (Junior Assistant) (தற்காலிகம்) | 1 | 13000/- | 50 வயது வரை | 10-ஆம் வகுப்பு தேர்ச்சி மற்றும் கணினி இயக்குவதில் முன்அனுபவச் சான்று பெற்றிருக்க வேண்டும். |
| 2. | அலுவலக உதவியாளர் (Office Assistant) (தற்காலிகம்) | 1 | 9100/- | 50 வயது வரை | எட்டாம் வகுப்பு தேர்ச்சி |

குறிப்பு: விண்ணப்பங்கள் **theni.nic.in** என்ற இணையதள முகவரியில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**முன்னுரிமை :** மேற்கண்ட பணியிடங்களுக்கான கல்வித்தகுதிகளை நிறைவு செய்து இதற்கு முன்னர் வட்டாட்சியர் அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலக பிரிவுகளில் தற்காலிக பணியமர்த்தல் ஆணைகள் பெற்று பணிபுரிந்து வருபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். முன்னுரிமை கோருபவர்கள் அலுவலகங்களில் பணிபுரிந்ததற்கான ஆணைகள் / சான்றுகள் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்களுக்கு சிறப்புத் தேர்வு நடத்தப்பட்டு, தேர்வில் பெறும் மதிப்பெண்களின் அடிப்படையில் பணிநியமனம் மேற்கொள்ளப்படும்.

தேர்வு நடத்தப்படும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

தேர்வுக்குரிய தலைப்பு/பொருள், மதிப்பெண் ஆகிய விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | பொருள் (Subject) | இளநிலை உதவியாளர் பணிக்கான விண்ணப்பதாரர் | அலுவலக உதவியாளர் பணிக்கான விண்ணப்பதாரர் |
|---|---|---|---|
| | | மதிப்பெண் (பெருமம்) | மதிப்பெண் (பெருமம்) |
| 1. | பேரிடர் மேலாண்மை | 10 | 05 |
| 2. | பொது அறிவு | 10 | 10 |
| 3. | கணினி பயன்பாடு | 10 | -- |
| 4. | பொது நிர்வாகம் | 10 | 05 |
| | **மொத்தம்** | **40** | **20** |
| | மாவட்ட ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர்/ வட்டாட்சியர் அலுவலக பிரிவுகளில் பணிபுரிந்தமைக்கான முன் அனுபவ சான்றிதழ் | 10 | 05 |
| | **கூடுதல் மொத்தம்** | **50** | **25** |

எனவே, மேற்காணும் பதவிகளுக்கு தகுதிபெற்ற நபர்கள் தங்களது விண்ணப்பம், கல்வி மற்றும் தகுதிச் சான்றிதழ் நகல்கள் மற்றும் முகவரி பூர்த்தி செய்யப்பட்டு புகைப்படம் ஒட்டிய ஆளறிச்சான்றிதழ் (மாதிரி விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளது), சுயமுகவரியிடப்பட்ட அஞ்சல் உறை (அந்த உறையில் ரூ.25/- ரூபாய்க்கான தபால் அஞ்சல் (Postal Stamp) ஒட்டப்பட்டிருக்க வேண்டும்) ஆகியவற்றினை மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தேனி என்ற முகவரிக்கு பதிவஞ்சல் / விரைவஞ்சலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலும், விண்ணப்பங்கள் அனுப்பும் உறையின் மேல் "**தேனி மாவட்டம்-பேரிடர் மேலாண்மை குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்படும் தற்காலிகப் பணியிடங்களுக்கான விண்ணப்பம்- 2022**" என எழுதி அனுப்பிவைக்குமாறும் தெரிவிக்கப்படுகிறது.

(ஒப்பம்) க.வீ.முரளீதரன்,
மாவட்ட ஆட்சித்தலைவர்,
தேனி.

/உ.ந.உ.ப/

26/3/22

அலுவலக மேலாளர் (பொது)

பெறுநர்

1. சார் ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர், பெரியகுளம்/உத்தமபாளையம்.
2. வட்டாட்சியர், உத்தமபாளையம்/போடிநாயக்கனூர்/ பெரியகுளம்/ தேனி/ ஆண்டிபட்டி.
3. தலைமை உதவியாளர், எப் பிரிவு, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தேனி.

அலுவலக விளம்பரப் பலகையில் விளம்பரம் செய்து அதற்குரிய சான்று வழங்கும் பொருட்டு

**கல்வித்தகுதி விவரம்:**

| | தேர்ச்சி பெற்ற ஆண்டு | மதிப்பெண் சதவீதம் | வகுப்பு |
|---|---|---|---|
| பள்ளி இறுதி வகுப்பு | | | |
| மேனிலை வகுப்பு | | | |
| கணினி பட்டயப்படிப்பு | | | |
| இளங்கலை பட்டப்படிப்பு (B.A/B.Sc/B.Com/Others) | | | |
| முதுநிலை பட்டப்படிப்பு (M.A/M.Sc/M.Com/Others) | | | |
| தட்டச்சு (தமிழ்) | | | |
| தட்டச்சு (ஆங்கிலம்) | | | |
| சுருக்கெழுத்து (தமிழ், ஆங்கிலம்) | | | |
| அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள முன்னுரிமை தகுதிகள் ஏதேனும் பெற்றுள்ளீரா? | | | |
| முன் அனுபவம் குறித்த விவரங்கள் | | | |
| குற்றவியல் வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளதா? | | | |
| தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி | | | |
| நிரந்தர முகவரி | | | |
| மின்னஞ்சல் முகவரி | | | |
| தொலைபேசி எண். | | | |

மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் அனைத்தும் உண்மையெனவும், உண்மைக்குப் புறம்பானதென பின்னர் தெரியவரும் பட்சத்தில் அரசு எடுக்கும் எவ்வித நடவடிக்கைக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் உறுதியளிக்கிறேன்.

இடம்:

நாள்:

விண்ணப்பதாரர் கையொப்பம்.

இணைப்பு: மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து சான்றிதழ்களின் நகல்கள்.

**தேனி மாவட்டம்**

**பேரிடர் மேலாண்மை குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்படும் தற்காலிகப் பணியிடங்களுக்கான விண்ணப்பம்- 2022**

விண்ணப்பதாரரது புகைப்படம்

| | |
|---|---|
| விண்ணப்பதாரர் பெயர் | |
| பாலினம் | |
| பிறந்த தேதி மற்றும் வயது | |
| தந்தை / தாயார் / கணவர் / மனைவி/ காப்பாளர் பெயர் | |
| விண்ணப்பதாரர் பிறந்த இடம் | |
| சொந்த மாவட்டம் | |
| தாய்மொழி | |
| பேச மற்றும் எழுதத் தெரிந்த இதர மொழிகள். | |
| தேசிய இனம் (Nationality) | |
| மதம் | |
| வகுப்பு | |
| சாதி உட்பிரிவின் பெயர் | |
| முன்னுரிமை பிரிவு ஆதரவற்ற விதவை/ முன்னாள் இராணுவத்தினர் / மாற்றுத்திறனாளி | |
| கல்வித் தகுதி | |

**<u>பேரிடர் மேலாண்மை குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்படும்</u>**
**<u>தற்காலிகப் பணியிடங்களுக்கான</u>**
**<u>ஆளறிச் சான்றிதழ்.</u>**

பதிவு எண். தேர்வு நாள்: / /2022.

விண்ணப்பதாரரது
புகைப்படம்

பெயர்: ______________________

முகவரி : ____________ ____________

______________________

______________________

______________________

தொலைபேசி எண் : ______________________